கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : செல்வி.பவித்ரா. G, எல்.எல்.எம்.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் புதன்கிழமை

**I.A.No.38/2026 in OS 316/2011**

செல்லபாஸ்கர் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. லில்லி ஜாய்ஸ்
2. ஜோசப் சாம்ராஜ்
3. கந்தலீலா
4. சரஸ்வதி
5. கணேசமுருகன்
6. V.L.V.S.கனகராஜ்
7. சீனிவாசகம் (இறந்துவிட்டார்)
8. ஞானமுத்து (இறந்துவிட்டார்)
9. ஜெயசீலன்
10. வசந்தி
11. சந்திரா (இறந்துவிட்டார்)
12. செல்லையா
13. செல்வின்
14. கமலவேணி
15. ரஞ்சிதம்

16.பியூலா ஹெலன்

17.பிரேம்சாந்த்

18.ஜெபஸ்டியான்

19.ரெஜினா

20.அற்புதராஜ்

21.நவமணி

22.சிம்சோன்

23.காலின்ஸ்

24.குணசேகரன் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு இறுதி விசாரணைக்காக 15.04.2026 அன்று வந்தபோது, மனுதாரர் தரப்பில் மனுதாரரே நேரடியாக முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ராகுல் அவர்கள் ஆஜராகியும், 7, 8 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும், 11ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டும், 9, 10, 12 முதல் 24 எதிர்மனுதாரர்களைப் பொறுத்து தோன்றாத்தரப்பினர்களாகத் தீர்மானிக்கப்பட்டும், தரப்பினர்களின் வாதங்களைக் கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(A) மற்றும் பிரிவு 151ன் கீழ், தாக்கல் செய்துள்ள கூடுதல் நிரூபண அபிடவிட்டுடன் கூடுதலாகத் தாக்கல் செய்துள்ள 1 முதல் 10 வரையிலான ஆவணங்களை 11 முதல் 21 வரையிலான சான்றாவணங்களாகக் குறியீடு செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் / வாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>** :–

அசல் வழக்கில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது, பிராது தபசில் சொத்துக்கள் தனக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டவை என விளம்புகைப் பரிகாரம் கோரியும், அதன் தொடர்ச்சியாக பிராதின் தபசில் சொத்துக்களை தான் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை, பிரதிவாதிகள் எவ்வித இன்னலும், இடையூறும் செய்யாமலிருக்க மேற்படியார்கள் மீது நிரந்தர நிலையுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும், தபசில் சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை இந்நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் அகற்றி தன் வசம் சுவாதீனம் வழங்கக் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்து, அதில் தனது தரப்பில் முதலாவதாகத் தாக்கல் செய்துள்ள நிரூபண அபிடவிட்டில், பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 10 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், அதே சமயம் 11 முதல் 21 வரையிலான ஆவணங்கள் தன் கைக்குக் கிடைக்காததினால், தான் கூடுதல் நிரூபண அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் விடுபட்டுள்ள 11 முதல் 21 வரையிலான ஆவணங்களை இந்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அவைகளைக் குறியீடு

செய்ய வேண்டி கூடுதல் நிரூபண அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளதாகவும், கூடுதல் சான்றாவணங்கள் அசல் வழக்கில் தனது கட்சியை நிரூபிக்கக்கூடியவைகள் என்றும், எனவே இந்நீதிமன்றம் தனது தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் அபிடவிட்டுடன் கூடிய கூடுதல் 11 முதல் 21 வரையிலான சான்றாவணங்களை ஏற்றுக் கொண்டு அவைகளைக் குறியீடு செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்து, 1, 2 மற்றும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்.

இவ்வழக்கானது கடந்த 04.12.2023 அன்று மனுதாரர் தரப்பு வாதுரைக்காக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மனுதாரர் வ.வி.எண்.22/2023 மனுவினைத் தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர், மனுதாரர் மீண்டும் வ.வி.எண்.23/23, 24/2023 மற்றும் 25/2023 ஆகிய மனுக்களைமங தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்கண்ட மனுக்கள் அனுமதிக்கப்பட்டதின் அடிப்படையில் திருவேங்கடம் வட்டாட்சியர் அவர்களும், கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அவர்களும் மனுதாரர் தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டனர் என்றும், அதன் பின்னர் பிரதான வழக்கானது மீண்டுமாக 05.06.2024 அன்று வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டது என்றும், ஆனால் மனுதாரர் தரப்பில் பிரதான வழக்கில் வாதுரை செய்யப்படாமல் மீண்டும் 27/2024 முதல் 29/2024 வரையிலான

மனுக்களை மனுதாரர் தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின் மனுதாரர் மீண்டும் 10.06.2024 ல் வ.வி.எண்.30/2024, 31/2024 ஐத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுக்களில் முழுமையான விசாரணைக்கு பிறகு 10.09.2024 ல் தள்ளுபடி செய்யப்பட்டு, வாதுரைக்காக மீண்டும் 12.09.2024 ல் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது என்றும், அதன் பின்னரும் தன் தரப்பு வாதுரையை எடுத்துரைக்க முன் வராத மனுதாரர் மீண்டும் 23.09.2024 ல் வ.வி.எண்.32/2024 என்ற மனுவினைத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் முழுமையான விசாரணைக்குப் பின்னர் 28.10.2024 ல் தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் வாதுரைக்காக வழக்கானது 04.12.2024 ல் ஒத்தி வைக்கப்பட்டது என்றும், அதன் பின்னரும் வாதுரையை எடுத்துரைக்க முன்வராத மனுதாரர், வாதுரைக்காக சில வாய்தாக்களை பெற்றுக்கொண்ட பின்னர் கடந்த 16.11.2024 ல் வ.வி.எண்.33/2024 மனுவினைத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் 23.04.2025 தேதிவரை வாதுரைக்காக பல வாய்தாக்களைப் பெற்றுவந்த மனுதாரர் மீண்டும் 30.04.2025 ல் வ.வி.எண்.34/2025 ஐத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் கடந்த 08.09.2025 ல் முழுமையான விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டு, மீண்டும் பிரதான வழக்கானது வாதுரைக்காக 12.09.2025 அன்று ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், பல வாய்தாக்களைப் பெற்றுக்கொண்ட மனுதாரர் மீண்டும் 26.11.2025 ல் வ.வி.எண்.35/2025 ஐத் தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுவும் முழுமையான விசாரணைக்குப் பின் 16.02.2026 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அதன் பின்னரும் வாதுரைக்காக பல வாய்தாக்களைப் பெற்றுக்கொண்ட மனுதாரர் தற்போது

இம்மனுவினையும், அத்துடன் வ.வி.எண்.37/2026 மற்றும் 38/2026 மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆக 02.12.2023ல் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த வழக்கை பல இடைநிலை மனுக்களைத் தாக்கல் செய்து, சுமார் 2 ஆண்டுகள் கடந்தும் மனுதாரர் வெற்றிகரமாக வாதுரை செய்யாமல் காலங்கடத்தி வருகிறார் என்றும், கடந்த 2 ½ ஆண்டுகளுக்கும் மேலாக வழக்கில் தனது வாதுரையை எடுத்துரைக்க முன் வராமல் Successful ஆக வழக்கை மனுதாரர் நிகழ்நிலையில் வைத்துள்ளார் என்றும், மேலும் மனுதாரர் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட இடைநிலை மனுக்களின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் CRP No.1475/2024, 1476/2024, 725/2025, 3096/2025 and 593/2025 ஆகிய சீராய்வு மனுக்களை தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்கண்ட சீராய்வு மனுக்களானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தள்ளுபடி செய்யப்பட்டும், இவ்வழக்கின் விசாரணையை விரைந்து முடிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டு (Specific) உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் இந்த மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவினை மதிக்காமல், தற்போது வரை அவமரியாதை செய்யும் நோக்கோடும் செயல்பட்டு தற்போது வரை இம்மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை CRP. No.3096/2025 and 593/2025 மனுக்களில் "Furthermore, the suit has been made time, bound purs want to the specific directions of this hon'ble court to complete the Proceeding and pass tinal orders within stipulate time frame – entertaining applications of this nature at the fag and of the trial would directly

defeat the expeditious disposal. Without sufficient supporting material and with the aparant intent to delay the proceedings. என குறிப்பிட்டு தெரிவித்துள்ளது என்றும், அதன் பின்னரும் மனுதாரர் மேற்கண்ட உத்தரவுகளை பின்பற்றவோ, நடைமுறைப்படுத்தவோ மன்றத்திற்கு எவ்வித ஒத்துழைப்பும் வழங்காமல் மீண்டுமாக இதுபோன்ற மனுக்களை தொடர்ச்சியாகத் தாக்கல் செய்து வருகிறார் என்றும், இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள 1 முதல் 7 வை ஆவணங்கள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகும் என்றும், அவை திருவேங்கடம் வட்டாட்சியர் மூலமாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், மற்ற ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய அந்தஸ்து இல்லாத ஆவணங்கள் என்றும், மேலும் மேற்கண்ட ஆவணங்களில் குறிப்பிட்ட சில ஆவணங்கள் ஒளிநகல் ஆவணங்கள் ஆகும் என்றும், வேறு சில ஆவணங்கள் Competent authoriuty ஆல் வழங்கப்படாத ஆவணங்கள் ஆகும் என்றும், எனவே மனுதாரர் குறியீடு செய்யக்கோரும் ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய அந்தஸ்து பெறாத ஆவணங்களாகும் என்றும், மனுதாரர் இவ்வழக்கினை Reopen செய்ய வேண்டுமென இம்மனுக்களுடன் சேர்த்து ஏழு வரையிலான மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார் என்றும், மேலும் ஆணையர் நியமனம் கோரி இரண்டு மனுக்கள் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்கண்ட மனுக்கள் விசாரணையில் இந்த மனுதாரர் Intension ஆனது வழக்கினை இழுத்தடிப்பு செய்ய வேண்டுமென்றே ஒரே நோக்கம் கொண்டதென இந்நீதிமன்றம் அறிந்து கொள்ள இயலும் என்றும், மேலும் இவ்வழக்கை தன்னிச்சையாக நடத்தி வரும் மனுதாரர் பல்வேறு Hearing தேதியில் ஆஜராகாத நிலையிலும், இந்நீதிமன்றம் அவருக்கு நீதியின் நலன் கருதி பல்வேறு

Opportunity ஐ வழங்கிய போதும் அவையனைத்தும் மனுதாரர் Misuse செய்து தொடர்ந்து இந்நீதிமன்ற உத்தரவையும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவையும் அவமரியாதை செய்து வருகிறார் என்றும், எனவே மனுதாரருக்கு இம்மனுக்களில் எவ்வித பரிகாரளும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், மனுதாரர் இதுபோன்று மனுக்களை தொடர்ந்து தாக்கல் செய்து எதிர்மனுதாரருக்கு இடைஞ்சலும், வீண் அலைக்கழிவும் உண்டு பண்ணும் நோக்கில் செயல்பட்டு வருவதால், மனுதாரின் மனுவினை எதிர்மனுதாரின் செலவுத்தொகை சகிதம் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டியதாய் இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1, 2 மற்றும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள், 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையை ஏற்றுக் கொள்வதாகக் கூறி குறிப்பாணை தாக்கல் செய்துள்ளனர். 9, 10, 12 முதல் 24 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப் போதிய கால அவகாசம் வழங்கியும், நீதிமன்றத்தில் எந்தவித எடுத்துரைப்பும் இல்லாததால் அவர்களைப் பொறுத்து 09.04.2026 அன்று தோன்றாத்தரப்பினர்களாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

5. மனு, அபிடவிட் மற்றும் எதிருரைகள் பரிசீலிக்கப்பட்டன. உபயத் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

6. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

7. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

8. **தீர்வு** :–

8.1. வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது 765/1, 426B/2B2A, 426B/9 ஆகிய சர்வே எண்களில் உள்ள பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை, சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள் கோரி வாதி/மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், அசல் வழக்கில் இரு தரப்பு சாட்சிய விசாரணைகள் முடிவுற்று, இரு தரப்பு வாதங்களைக் கேட்பதற்காக வாய்தா போடப்பட்ட நிலையில், வாதி தரப்பில் கூடுதல் சான்றாவணங்களை ஏற்றுக்கொள்ளக்கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

8.2.மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது, பிராது தபசில் சொத்துக்கள் தனக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டவை என விளம்புகைப் பரிகாரம் கோரியும், அதன் தொடர்ச்சியாக பிராதின் தபசில் சொத்துக்களை தான் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை, பிரதிவாதிகள் எவ்வித இன்னலும், இடையூறும் செய்யாமலிருக்க மேற்படியார்கள் மீது நிரந்தர

நிலையுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும், தபசில் சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை இந்நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் அகற்றி தன் வசம் சுவாதீனம் வழங்கக் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்து, அதில் தனது தரப்பில் முதலாவதாகத் தாக்கல் செய்துள்ள நிரூபண அபிடவிட்டில், பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 10 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், அதே சமயம் 11 முதல் 21 வரையிலான ஆவணங்கள் தன் கைக்குக் கிடைக்காததினால், தான் கூடுதல் நிரூபண அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் விடுபட்டுள்ள 11 முதல் 21 வரையிலான ஆவணங்களை இந்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அவைகளைக் குறியீடு செய்ய வேண்டி கூடுதல் நிரூபண அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளதாகவும், கூடுதல் சான்றாவணங்கள் அசல் வழக்கில் தனது கட்சியை நிரூபிக்கக்கூடியவைகள் என்றும், எனவே இந்நீதிமன்றம் தனது தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் அபிடவிட்டுடன் கூடிய கூடுதல் 11 முதல் 21 வரையிலான சான்றாவணங்களை ஏற்றுக் கொண்டு அவைகளைக் குறியீடு செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

8.3. 1, 2 மற்றும் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில்,இவ்வழக்கானது கடந்த 04.12.2023 அன்று மனுதாரர் தரப்பு வாதுரைக்காக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மனுதாரர் வ.வி.எண்.22/2023 மனுவினைத் தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர், மனுதாரர் மீண்டும் வ.வி.எண்.23/23, 24/2023 மற்றும் 25/2023 ஆகிய மனுக்களைமங

தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்கண்ட மனுக்கள் அனுமதிக்கப்பட்டதின் அடிப்படையில் திருவேங்கடம் வட்டாட்சியர் அவர்களும், கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அவர்களும் மனுதாரர் தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டனர் என்றும், அதன் பின்னர் பிரதான வழக்கானது மீண்டுமாக 05.06.2024 அன்று வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டது என்றும், ஆனால் மனுதாரர் தரப்பில் பிரதான வழக்கில் வாதுரை செய்யப்படாமல் மீண்டும் 27/2024 முதல் 29/2024 வரையிலான மனுக்களை மனுதாரர் தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின் மனுதாரர் மீண்டும் 10.06.2024 ல் வ.வி.எண்.30/2024, 31/2024 ஐத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுக்களில் முழுமையான விசாரணைக்கு பிறகு 10.09.2024 ல் தள்ளுபடி செய்யப்பட்டு, வாதுரைக்காக மீண்டும் 12.09.2024 ல் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது என்றும், அதன் பின்னரும் தன் தரப்பு வாதுரையை எடுத்துரைக்க முன் வராத மனுதாரர் மீண்டும் 23.09.2024 ல் வ.வி.எண்.32/2024 என்ற மனுவினைத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் முழுமையான விசாரணைக்குப் பின்னர் 28.10.2024 ல் தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் வாதுரைக்காக வழக்கானது 04.12.2024 ல் ஒத்தி வைக்கப்பட்டது என்றும், அதன் பின்னரும் வாதுரையை எடுத்துரைக்க முன்வராத மனுதாரர், வாதுரைக்காக சில வாய்தாக்களை பெற்றுக்கொண்ட பின்னர் கடந்த 16.11.2024 ல் வ.வி.எண்.33/2024 மனுவினைத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் 23.04.2025 தேதிவரை வாதுரைக்காக பல வாய்தாக்களைப் பெற்றுவந்த மனுதாரர் மீண்டும் 30.04.2025 ல் வ.வி.எண்.34/2025 ஐத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவும் கடந்த

08.09.2025 ல் முழுமையான விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டு, மீண்டும் பிரதான வழக்கானது வாதுரைக்காக 12.09.2025 அன்று ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், பல வாய்தாக்களைப் பெற்றுக்கொண்ட மனுதாரர் மீண்டும் 26.11.2025 ல் வ.வி.எண்.35/2025 ஐத் தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுவும் முழுமையான விசாரணைக்குப் பின் 16.02.2026 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அதன் பின்னரும் வாதுரைக்காக பல வாய்தாக்களைப் பெற்றுக்கொண்ட மனுதாரர் தற்போது இம்மனுவினையும், அத்துடன் வ.வி.எண்.37/2026 மற்றும் 38/2026 மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆக 02.12.2023 ல் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த வழக்கை பல இடைநிலை மனுக்களைத் தாக்கல் செய்து, சுமார் 2 ஆண்டுகள் கடந்தும் மனுதாரர் வெற்றிகரமாக வாதுரை செய்யாமல் காலங்கடத்தி வருகிறார் என்றும், கடந்த 2 ½ ஆண்டுகளுக்கும் மேலாக வழக்கில் தனது வாதுரையை எடுத்துரைக்க முன் வராமல் Successful ஆக வழக்கை மனுதாரர் நிகழ்நிலையில் வைத்துள்ளார் என்றும், மேலும் மனுதாரர் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட இடைநிலை மனுக்களின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் CRP No.1475/2024, 1476/2024, 725/2025, 3096/2025 and 593/2025 ஆகிய சீராய்வு மனுக்களை தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்கண்ட சீராய்வு மனுக்களானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தள்ளுபடி செய்யப்பட்டும், இவ்வழக்கின் விசாரணையை விரைந்து முடிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டு (Specific) உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் இந்த மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவினை

மதிக்காமல், தற்போது வரை அவமரியாதை செய்யும் நோக்கோடும் செயல்பட்டு தற்போது வரை இம்மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை CRP. No.3096/2025 and 593/2025 மனுக்களில் "Furthermore, the suit has been made time, bound purs want to the specific directions of this hon'ble court to complete the Proceeding and pass tinal orders within stipulate time frame – entertaining applications of this nature at the fag and of the trial would directly defeat the expeditious disposal. Without sufficient supporting material and with the aparant intent to delay the proceedings. என குறிப்பிட்டு தெரிவித்துள்ளது என்றும், அதன் பின்னரும் மனுதாரர் மேற்கண்ட உத்தரவுகளை பின்பற்றவோ, நடைமுறைப்படுத்தவோ மன்றத்திற்கு எவ்வித ஒத்துழைப்பும் வழங்காமல் மீண்டுமாக இதுபோன்ற மனுக்களை தொடர்ச்சியாகத் தாக்கல் செய்து வருகிறார் என்றும், இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள 1 முதல் 7 வை ஆவணங்கள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகும் என்றும், அவை திருவேங்கடம் வட்டாட்சியர் மூலமாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், மற்ற ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய அந்தஸ்து இல்லாத ஆவணங்கள் என்றும், மேலும் மேற்கண்ட ஆவணங்களில் குறிப்பிட்ட சில ஆவணங்கள் ஒளிநகல் ஆவணங்கள் ஆகும் என்றும், வேறு சில ஆவணங்கள் Competent authoriuty ஆல் வழங்கப்படாத ஆவணங்கள் ஆகும் என்றும், எனவே மனுதாரர் குறியீடு செய்யக்கோரும் ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய அந்தஸ்து பெறாத ஆவணங்களாகும் என்றும், மனுதாரர் இவ்வழக்கினை Reopen செய்ய வேண்டுமென இம்மனுக்களுடன் சேர்த்து ஏழு வரையிலான மனுக்களைத்

தாக்கல் செய்திருந்தார் என்றும், மேலும் ஆணையர் நியமனம் கோரி இரண்டு மனுக்கள் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்கண்ட மனுக்கள் விசாரணையில் இந்த மனுதாரர் Intension ஆனது வழக்கினை இழுத்தடிப்பு செய்ய வேண்டுமென்றே ஒரே நோக்கம் கொண்டதென இந்நீதிமன்றம் அறிந்து கொள்ள இயலும் என்றும், மேலும் இவ்வழக்கை தன்னிச்சையாக நடத்தி வரும் மனுதாரர் பல்வேறு Hearing தேதியில் ஆஜராகாத நிலையிலும், இந்நீதிமன்றம் அவருக்கு நீதியின் நலன் கருதி பல்வேறு Opportunity ஐ வழங்கிய போதும் அவையனைத்தும் மனுதாரர் Misuse செய்து தொடர்ந்து இந்நீதிமன்ற உத்தரவையும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவையும் அவமரியாதை செய்து வருகிறார் என்றும், எனவே மனுதாரருக்கு இம்மனுக்களில் எவ்வித பரிகாரளும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், மனுதாரர் இதுபோன்று மனுக்களை தொடர்ந்து தாக்கல் செய்து எதிர்மனுதாரருக்கு இடைஞ்சலும், வீண் அலைக்கழிவும் உண்டு பண்ணும் நோக்கில் செயல்பட்டு வருவதால், மனுதாரின் மனுவினை எதிர்மனுதாரின் செலவுத்தொகை சகிதம் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டியதாய் இருக்கிறது என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

8.4. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் மனுதார்/வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய அவசியமான ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களை வாதி தரப்பு கூடுதல் சான்றாவணங்களாக தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதம்

வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், மேற்கண்ட ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யாவிட்டால், வாதிக்கு பெரும் இழப்பு ஏற்படும் என்றும், அதனால் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1 முதல் 11 ஆவணங்களை வாதி தரப்பு கூடுதல் சான்றாவணங்களாக குறியீடு செய்யும் வகைக்கு அந்த ஆவணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமென்றும் எடுத்துரைக்கப்பட்டது. 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில், கடந்த 04.12.2023 அன்று அசல் வழக்கு மனுதாரர் தரப்பு வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், மனுதாரர் வ.வி.எண்.22/2023 என்ற மனுவை தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு வ.வி.எண்.23/2023 முதல் 25/2023 வரையிலான மனுக்களை மனுதாரர் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுக்கள் அனுமதிக்கப்பட்டதன் பேரில் திருவேங்கடம் வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கரிவலம்வந்தநல்லூர்சார்பதிவாளர் ஆகியோர்கள் வாதி தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டனர் என்றும், அதன் பின்னர் அசல் வழக்கு மீண்டும் மனுதாரர் தரப்பு வாதுரைக்காக 05.06.2024 அன்று ஒத்தி வைக்கப்பட்டது என்றும், அன்றைய தினம் மனுதாரர் தனது தரப்பு வாதுரையை அளிக்காமல் பதிலாக வ.வி.எண்.27/2024 முதல் 29/2024 வரையிலான மனுக்களைத் தாக்கல் செய்தார் என்றும், அம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு அதைத் தொடர்ந்து வ.வி.எண்.30/2024 முதல் 38/2024 வரையிலான மனுக்களை 10.06.2024 அன்றும் அதன் பின்னர் தற்போது வரை மனுதாரர் தரப்பில் பல மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், அம்மனுக்கள் அனைத்தும் முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டன என்றும், அசல் வழக்கில் வாதம்

செய்யாமல் சுமார் 2 ½ ஆண்டுகளாக மனுதாரர் காலம்கடத்தி வருகிறார் என்றும், தள்ளுபடி செய்யப்பட்ட மேற்படி மனுக்கள் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP.No.1475/2024, 1476/2024, 725/2025, 3096/2025 மற்றும் 593/2025 ஆகிய சீராய்வு மனுக்களை தாக்கல் செய்திருந்தார் என்றும், அம்மனுக்களை மாண்புமிகு உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து அசல் வழக்கை விரைந்து முடிக்க வேண்டுமென உத்தரவு பிறப்பித்தது என்றும், அந்த உத்தரவை மனுதாரர் மதியாமல் அசல் வழக்கை காலம்கடத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு தொடர்ந்து மனுக்களை தாக்கல் செய்து வருகிறார் என்றும், இம்மனுவுடன் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 11 சான்றாவணங்களுள் 1 முதல் 7 சான்றாவணங்கள் ஏற்கனவே நீதிமன்றத்தில் திருவேங்கடம் வட்டாட்சியர் மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், மற்ற ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய அந்தஸ்து இல்லாத ஆவணங்கள் என்றும், மேற்கண்ட ஆவணங்களில் குறிப்பிட்ட சில ஆவணங்கள் ஒளி நகல் ஆவணங்கள் என்றும், வேறு சில ஆவணங்கள் உரிய அதிகாரியிடமிருந்து பெறப்படாத ஆவணங்கள் என்றும், எனவே மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யக்கோரும் ஆவணங்கள் அனைத்தும் சாட்சிய அந்தஸ்து பெறாத ஆவணங்கள் என்றும், வழக்கில் வீண் காலதாமதமும், எதிர்மனுதாரர்களுக்கு வீண் அலைக்கழிவும் உண்டு பண்ணும் நோக்கில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

8.5. மனு, எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது 765/1, 426B/2B2A, 426B/9 ஆகிய சர்வே எண்களில் உள்ள

பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை, சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள் கோரி வாதி/மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 11 ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1வது ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில், அந்த ஆவணம் சங்கரன்கோவில் தலைமை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டா எண்.434 கொண்ட பட்டாவின் நகல் என்பதையும், அந்த நகலில் மருத்துவர் பத்மநாதன் என்பவரின் சான்றொப்பம் மட்டுமே உள்ளது என்பதையும் அறிய முடிகிறது. மேற்கண்ட ஆவணம் உரிய அதிகாரியடமிருந்து சான்றொப்பம் பெறாத நகல் ஆவணம் என்பதால், அது நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 2வது ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில், அந்த ஆவணம் பட்டா எண்.434 பொறுத்து தனராஜ் என்பவரது பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதின் நகல் என்பதையும் அந்த நகலிலும் மருத்துவர் பத்மநாதன் என்பவரின் சான்றொப்பம் மட்டுமே உள்ளது என்பதையும் அறிய முடிகிறது. மேற்கண்ட ஆவணம் அசல் ஆவணம் அல்ல என்பதைக் கருத்தில் கொண்டும், அது உரிய அதிகாரியிடமிருந்து சான்றொப்பம் பெறப்படாத நகல் என்பதைக் கருத்தில் கொண்டும், அந்த ஆவணம் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. 3வது ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில், அந்த ஆவணம் பட்டா எண்.434க்கு 25.05.2009ம் தேதி வாதி/மனுதாரரால் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதின் அசல் என்பதையும், மேற்கண்ட தீர்வை ரசீதில் காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுலர் என்று குறிப்பிடப்பட்டு கையொப்பம் என்பதையும் அறிய

முடிகிறது. மேற்கண்ட ஆவணம் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 4 வது ஆவணத்தைப் பரிசீலினை செய்ததில், அந்த ஆவணம் 1429 பசலி ஆண்டிற்கு சசர்வே எண்.426B/2B2A மற்றும் 1430 பசலி ஆண்டிற்கு சர்வே எண். 426B/9 ஆகியவற்றிக்கான சாகுபடி அடங்கல் கணக்கின் சான்றிடப்பட்ட நகல் என்பதையும், மேற்படி ஆவணம் திருவேங்கடம் தலைமையிடத்து துணை வட்டாட்சியரால் சான்றிடப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. மேற்கண்ட ஆவணம் நீதிமன்றத்தால்ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. 5 வது ஆவணம் 11.05.2010 ம் தேதியில் 2, 3 அயிட்ட சொத்துக்களுக்கு காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அத்துமாலின் நகல் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை ப் பரிசீலனை செய்ததில், ஒரு வெள்ளை காகிதத்தில் சர்வே எண். 426B/9 க்கான 4 மால்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும்,அந்த காகிதத்தின் பின்புறத்தில் சர்வே எண்.426B/2B2A மற்றும் 765/1 ஆகியவற்றிற்கான 4 மால்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதையும், அந்த காகிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாரால் எழுதப்பட்டது என்ற விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பதையும், மேற்படி காகிதங்களுடன் ஏதோ ஒரு புல வரைபடத்தின் பாதி பகுதி மட்டும் இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் அந்த பாதி புல வரைபடத்தில் அது எந்த சர்வே எண்ணுக்குரியது என்று துலங்கவில்லை என்பதையும் அதில் உண்மை நகல் என்று ஒரு நபரால் கையொப்பமிடப்பட்டுள்ளது என்பதையும் அந்த நபர் எந்த நிலையில் அதை உண்மை நகலாக சான்றொப்பம் அளித்துள்ளார் என்பது பற்றிய எந்த விபரமும் துலங்கவில்லை

என்பதையும் அறிய முடிகிறது. மேற்படி பரிசீலனையிலிருந்து 5 வது சான்றாவணம் ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றாவணம் அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 6 வது ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில், அந்த ஆவணம் சர்வே எண்.426B/2A, 426B/8 மற்றும் 426B/9 ஆகிய புல எண்களுக்கான 'அ' பதிவேடு அடங்கல் மற்றும் அதன் வரைபடம் ஆகியவற்றை வாதி/மனுதாரர் பொது தகவல் அலுவலர் மற்றும் திருவேங்கடம் தலைமையிடத்து துணை வட்டாட்சியரிடம் கோரியதன் பேரில் அளிக்கப்பட்டது என்பதற்கான கடிதம் என்பதையும் அந்த கடிதத்துடன் மேற்படி தகவல்கள் அடங்கிய திருவேங்கடம் தலைமையிடத்து துணை வட்டாட்சியாரால் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. மேற்படி ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில் அந்த ஆவணம் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 7 வது ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில், அந்த ஆவணம் வாதி/மனுதாரரால், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பொதுத்தகவல் அலுவலர் மற்றும் திருவேங்கடம் தலைமையிடத்து துணை வட்டாட்சியரிடம் வழங்கப்பட்ட மனுவைப் பொறுத்து பிறப்பிக்கப்பட்ட கடிதம் என்பதை அறிய முடிகிறது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்ததில் அந்த ஆவணமும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 8 வது ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில், அந்த ஆவணம் சர்வே எண்.426/B5B, 426/B6B, 426/B2B, 426/B2B2B, 426/B2B1A, 426/B2B1B ஆகியவற்றிற்கு 10 ஆண்டுகளுக்கான (01.06.2003 முதல் 26.01.2012) கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட வில்லங்கச் சான்றிதழ் என்பதை அறிய முடிகிறது. மேற்படி ஆவணமும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் என்று

இந்நீதிமன்றம் கருதுகிறது. 9 வது ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில், அந்த ஆவணம் 6 ம் பிரதிவாதி கனகராஜ் காரிச்சாத்தான் ஊராட்சி மன்ற தலைவரிடம் கட்டிட அனுமதி பெற கொடுத்த விண்ணப்பத்தின் நகல் என்பதையும், அந்த நகல் திருநெல்வேலி தலைமை குற்றவியல் நீதித்துறை நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்ட சான்றிடப்பட்ட நகல் என்பதையும் அறிய முடிகிறது. மேற்படி ஆவணமும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 10 வது ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில், அந்த ஆவணம் புல எண்.426B க்கான புல வரைபடத்தின் உண்மை நகலின் நகல் என்பதையும், அந்த நகலில் மருத்துவர் பத்மநாதன் என்பவரின் சான்றொப்பம் மட்டுமே உள்ளது என்பதையும் அறிய முடிகிறது. மேற்கண்ட ஆவணம் உரிய அதிகாரியிடமிருந்து சான்றொப்பம் பெறப்படாத உண்மை நகலின் நகல் என்பதால், அது ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 11 வது ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில், அந்த ஆவணம் சர்வே எண்.426/B க்கான புல வரைபடத்தின் சான்றிடப்பட்ட நகல் என்பதையும் அந்த ஆவணத்தில் திருவேங்கடம் தலைமையிடத்து துணை வட்டாட்சியரின் சான்றொப்பம் உள்ளது என்பதையும் அறிய முடிகிறது. மேற்படி ஆவணத்தை பரிசீலித்ததில் அது ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட விவாதத்திலிருந்து வாதி/மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 11 ஆவணங்களுள் 3, 4, 6 முதல் 9 மற்றும் 11 ஆகிய ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணங்கள் என்றும், மீதமுள்ள ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணங்கள் அல்ல என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8.6. மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 11 சான்றாவணங்களுள் 1 முதல் 7 சான்றாவணங்கள் ஏற்கனவே திருவேங்கடம் வட்டாட்சியர் மூலம் குறியீடு செய்யப்பட்டுவிட்டதாக எதிருரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்ததில், திருவேங்கடம் மண்டல துணை வட்டாட்சியர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்பதையும், அவர் மூலமாக சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்பதையும் அறிய முடிகிறது. சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், சர்வே எண்.426B/2B2A மற்றும் சர்வே எண்.426B/9 ஆகியவற்றிற்கு 1433 பசலி ஆண்டிற்கான சாகுபடி அடங்கல் கணக்கின் உண்மை நகல் சா.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், மேற்சொன்ன சர்வே எண்களுக்கான அ பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், சர்வே எண்.426B க்கான புல வரைபடத்தின் உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், வா.சா.2 க்கு வழங்கப்பட்டுள்ள சம்மனில் போடப்பட்டுள்ள 14.08.1995 தேதியிட்ட செயல்முறை ஆணை TK8A/21/1405 சங்கரன்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வருகிறது என்பதை காண்பிக்கும் வட்டாட்சியர் வழங்கிய சான்று சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களையும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 11 ஆவணங்களுள் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக தெரிவிக்கப்பட்டுள்ள ஆவணங்களையும், பரிசீலனை செய்ததில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 11 வது

ஆவணமான சர்வே எண்.426B க்கான புல வரைபடத்தின் உண்மை நகல் மட்டுமே சா.சா.ஆ.3 ஆக வா.சா.2 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஏனைய ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணங்கள் வா.சா.2 மூலம் குறியீடு செய்யப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. மனுவைப் பரிசீலனை செய்ததில் மேற்படி 11 வது ஆவணத்தில் 14.08.1995 ல் நீக்கப்பட்ட பழைய சர்வே எண்கள் தற்போதும் வருவாய்துறை ஆவணங்களில் இருப்பதாக காண்பிப்பதற்கு மோசடியாகவும், 3, 5, 6 பிரதிவாதிகளுக்கு சாதகமாகவும், பென்சிலால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று மனுதாரரால் எடுத்துரைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. எனவே சா.சா.ஆ.3 ஆக சர்வே எண்.426B க்கான புல வரைபடத்தின் சான்றிடப்பட்ட நகல் குறியீடு செய்யப்பட்டுள்ள போதிலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 11 வது ஆவணமான புல வரைபடத்தின் உண்மை நகலை ஏற்றுக் கொள்வது நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8.7. மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள 11 ஆவணங்களுள் 3, 4, 6 முதல் 9 மற்றும் 11 ஆகிய ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணங்கள் என்று கருதி, வாதி தரப்பு கூடுதல் சான்றாவணங்களை ஏற்றுக் கொள்ளக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை மேற்கண்ட ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணங்களைப் பொறுத்து மட்டும் அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**முடிவாக**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள 11 ஆவணங்களுள் 3, 4, 6 முதல் 9 மற்றும் 11 ஆகிய ஆவணங்கள் பொறுத்து மட்டும் இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PAVITHRA G
Digitally signed by PAVITHRA G
Date: 2026.04.22 16:19:22 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :–** – இல்லை –

PAVITHRA G
Digitally signed by PAVITHRA G
Date: 2026.04.22 16:19:27 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

சங்கரன்கோவில்.

கூ.மா.உ.நீ, சங்கரன்கோவில்,

I.A.No.38/2026

in

O.S.No.316/2011

உத்தரவு ( வரைவு/நேரிய)

நாள் : 22.04.2026